| | | |
|---|---|---|
| சாட்சி : PW1<br>ஜோதி | அ.வ.எண். 253/2019 | 15.11.2024 |

<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தின் அசல் என் வசம் உள்ளதா என்றால் அடமானத்தில் வைத்துள்ளேன். மேற்படி விவரத்தை எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். (மேற்படி கேள்வி வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் பதிவு செய்யப்பட்டது.) வழக்கு சொத்தின் சர்வே எண்.4/1A ஆகும். வழக்கு சொத்தின் நான்கெல்லை கிழக்கு, தெற்கு புறம் பாசன வாய்க்கால், வடக்கில் ராஜேஸ்வரி வீடு, மேற்கில் தெரு உள்ளது. மேற்படி சர்வே எண்ணிற்கு கட்டுப்பட்ட நிலம் 18–3/4 சென்ட் ஆகும். அதில் 10–1/2 சென்டை நான் விலைக்கு வாங்கியுள்ளேன். நான் மேற்சொன்ன நான்கெல்லையானது நான் கிரையம் பெற்ற 10–1/2 சென்டுக்கான நான்கெல்லையாகும். வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் வடபுறம் பாசன வாய்க்கால் என்று இருந்தால் தவறு என்றால் சரியல்ல, கிழக்கு புறத்தில் தான் பாசன வாய்க்கால் உள்ளது. தென்புறம் தான் ராஜேஸ்வரி வீடு உள்ளதாகவும், கிழபுறம் வீதி உள்ளதாகவும், மேல்புறம் வாய்க்கால் உள்ளதாகவும் வா.சா.ஆ.1 ல் கண்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் நான் அனுபவத்தில் இல்லாத காரணத்தினால் தான் நான்கெல்லையை என்னால் சரியாக சொல்ல இயலவில்லை என்றால் சரியல்ல.